Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300) of 1953. விரோதிஇல (1889) ஆவணிமீ 28 உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஇல ஐப்பசிமீ உசவ வெள்ளிக்கிழமை (9 November. 1962) [இல-நஉக]

உலகியல் அலை

# நிதி அமைச்சுக்குப்புதிய தலைவர்

## வருடம் ஒன்றுக்குள் மாற்றம் மூன்று!!

—0—

### அரிசிஅளவில் வெட்டுப் புரிவதுகட்டாயம்!!!

போன மணமகன் திரும்பி வந்தான் என்றபடி பிலிக்சு பழையபடி மந்திரி சபையுட் புகுந்ததும் முன் போல அமைச்சர் இடமாற்ற நெருக்கடி தோன்றிவிட்டது. வல்லை வெளியிற் காணியை நன்கொடை கொடுத்தாலும் இல்லை வேண்டாம் என்று சொல்லுவதுபோல நிதி அமைச்சர் பதவியை விரும்புபவர் யாருமில்லை, இருந்தும் கலுகல அதற்குப் பொருந்திவிட்டார். அதற்கு முன் இறம்புக்கனையிற் பேசும்பொழுது அரிசி அளவு வெட்டு ஆகத்தான் வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஈழத்தில் ஏன் இந்த விதமான அரசியற்றடுமாற்றம் இருக்கின்றதோ அறிய முடியவில்லை. எண்ணித் துணிவது கருமம் என்பது இலக்கணம் என்றால் இந்நாட்டில் எண்ணாது செய்வதே முறை என்று அரசியற் போக்கிருக்கின்றது.

சதிக்குற்றச்சட்டம்இயற்றப்பட்டு மூன்று நீதியரசர்கள் முன்பு திறமைவாய்ந்த நியாயவாதிகளாற் பிழை பிடிக்கப்பட்டு,இப்பொழுது திருத்தங்களுக்கும் இடமாய் விட்டது. அரசினர்கொண்டு வரும் திருத்தங்கள் அத்தனையும் போதாவென்றும் இன்னும் நுணுக்கமாக ஆராயவேண்டுமென்றும் ஆளுங்கட்சி அங்கத்தினரே அபிப்பிராயப்படுகின்றனர்.

இந்தவிதமாகவே அரிசி அளவில் வெட்டு ஆளுங்கட்சிக்குட் பிளவை உண்டு பண்ணிக்கொண்டிருந்தாலும் பிடித்தபிடி விடாது பீலிக்சும் பிரயத்தனஞ் செய்தபடியேயிருக்கின்றார். சீ. பீ. டி. சில்வா விலகி நிற்பது இதை உறுதிப் படுத்துகிறது. சீன இந்திய நெருக்கடிபற்றி ஈழத்து அரசினர். பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கை பூனைக்குந்தோழன் பாலுக்குங் காவல் என்ற பான்மையிலிருக்கின்றதா, அல்லது உப்புப் புளி இல்லாத உரையா, அன்றி உயர்ந்த அரசியல்வேதாந்தமா? எது என்பதை மக்கள் ஆராய் கிறவேலையில் ஈடுபடவேண்டியிருக்கிறது.

கியுபாவிலிருந்து உருசியா வெளிக்கிளம்புவதன் கருத்தென்ன? சீனவின் சிநேகத்தையும் செம்படையின் நன்மையையும் கருதியா?

## சிந்துப்பிட்டியில் சமயப் பிரசாரம்

கடந்த சில மாதங்களாக கொழும்பு சிந்துப்பிட்டிச் சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் பிரதி ஞாயிறு தோறும் மாலை 6 மணிக்கு ஆரம்பித்து ஒலிபெருக்கி சகிதம் நிகழ்ந்துவரும் கூட்டுப் பிரார்த்தனை சொற்பொழிவில் ஆங்கில கார்த்திகைமாத நிகழ்ச்சிகளாக 4-11-62-ல் கூட்டுப் பிரார்த்தனையைத் தொடர்ந்து "நாதன் நாமம்" என்னும் தலைப்பிலும் 11-11-62-ல் "தேன்வதை" என்ற தலைப்பிலும், 18-11-62-ல் "சமய மறுமலர்ச்சி" என்ற பொருள்பற்றியும் 25-11-62 இல் சுவாமி நியமானந்தஜீ அவர்களால் "வாழ்க்கையின் இலட்சியம்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும் என அறியப்படுகின்றது.

## நற் சிந்தனை

இடத்து மடந்தையை
வைத்த பெருமான்
நடத்தைக் கண்டால்
நாமுய்ந் தோமே.

## சிதம்பரத்தில் நாவலர் விழா

எதிர்வரும் 19-11-62 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சிதம்பரம் மேற்கு வீதி உயர் நிலைப்பள்ளி நடுமன்றத்தில் நாவலர் பெருமான் 83-ஆம் குருபூசைத் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

அன்று மாலை 4 மணிக்கு மேல் S. சச்சிதானந்தம் B. A, அவர்கள் தலைமையில் கலைமகள் பத்திரிகை ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் உரைநிகழ்த்துவார் என அறியப்படுகிறது.

## சமயப்பிரசார சபையின் ஆண்டு விழா

நிகழும் சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 24-ந் திகதி (9-11-62) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிமுதல் 5 மணிவரை நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவில் இயங்கும் அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயப்பிரசார சபையினரின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா அதன் தலைவர் ஸ்ரீமத் C. S. S. மணி பாகவதரவர்கள் தலைமையில் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் நிறைவேறும். அவ்வமையம் பல பிரமுகர்களும், பெண்மணிகளும் சொற்பொழிவாற்றுவார்கள். முருகன் பக்திப் பாடல்களும் பாடப்படும்.

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்றும்
அணிகிளருமுருமென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமேணிவயிரக்கோவைதோன்றும்
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டிநின்றதோர்திறமுந்தோன்றும்
சேக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே,

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றுனுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

# ஐவகை யாகம்

அல்லது

# "பஞ்ச யக்ஞம்"

[ பிரம்மஸ்ரீ இ. ஞானசேகரக்குருக்கள் அவர்கள் ]

பஞ்ச யக்ஞமாவது மானுடப் பிறப்படைந்த ஒவ்வொருவரும் பிரதிதினமும்செய்யவேண்டிய ஐந்து வகையான யாகம் எனப் பொருள்படும். இது தேவ யக்ஞம், அக்கினி யக்ஞம், பிதிர் யக்ஞம், மனுட யக்ஞம், பூதயக்ஞம் என ஐந்து பிரிவினையுடையது.

தேவ யக்ஞமாவது: முதற் கடவுளாகிய, சகல பிரபஞ்சங்களையும் படைத்துக் காத்து அழிக்கின்ற முதல்வனைப் பூசித்து வழிபடுதல். நாடோறும் சூரியன்உதிக்க முன்னும் நட்சத்திரங்கள் மறையு முன்னும் உள்ள காலமும்— சூரியன் மறையு முன்னும், நட்சத்திரங்கள் உதிக்க முன்னும் உள்ள காலமும் ஆகிய சந்தியா காலங்களிலே நாம் ஒவ்வொருவரும், தேகசுத்தியும் மனத்தூய்மையும் உடையவராகிச் சூரியன் நிற்குந் திக்கை நோக்கி, வணங்கி வழிபாடுசெய்வதாம். காலையிலும் மாலையிலும் சூரியனிடமிருந்து மின்சார சக்தியானது, உலகுக்கு வருகிறது. இதைத் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணர்கூடஒத்துக்கொள்கின்றனர். இம் மின்சாரசக்தி மனுஷனுடைய உடம்பிலுள்ள அநேக துர்க்கிருமிகளை அழித்து உடம்பைச் சுகமுடையதாக்கி விடுகின்றது.

இனி, இரண்டாவது அக்கினி யக்ஞம்: பிரதி தினமும் அக்கினி வளர்த்து அதில் சமித்து வகைகளைப் போட்டு எரித்தலினால் ஆகின்ற புகையை வீட்டுள்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## தருவாய் விருந்து!

★

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : மோகனம் :: தாளம் : ஆதி

பல்லவி

வலிய காலன் நலியா தென்முன்
வரவேண் டும்முரு கா — முருகா. (வ)

அனுபல்லவி

தலையி லுன்பதம் தாங்கி யிருந்து
தமியேன் மகிழத் தருவாய் விருந்து (வ)

சரணம்

சரவண பவஎன்று சாலவும் தொண்டு
சந்ததம் புரிந்திடும் சால்பினைக் கொண்டு
கருணை [illegible]
[illegible]பெற [illegible] (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் கும்மி

•••○○•••

கும்மிய டியுங்கள் கும்மிய டியுங்கள்
கோதையர்! கும்மிய டியுங்கடி (கும்மிய)

1. நல்லூர் நல்குயர் நாவலன் அவன்பேர்
நாரியர்! பாடிய டியுங்கடி (கும்மிய)

2. பல்லோர் போற்றிடும் பாவலன் அவன்சீர்
பாவையர்! பாடிய டியுங்கடி (கும்மிய)

3. தன்னிக ரில்லாத் தலைவன் அவன்புகழ்
தையலார்! பாடிய டியுங்கடி (கும்மிய)

4. நன்னெறி காட்டிய நம்பன் அவனிசை
நங்கையர்! பாடிய டியுங்கடி (கும்மிய)

5. சிவநெறி தேரித்திடு சீலன் அவன்றனைத்
தெரிவையர்! பாடிய டியுங்கடி (கும்மிய)

6. ஐயனவன் தனக்கிணை யாரும் இல்லையென
அரிவையர்! பாடிய டியுங்கடி (கும்மிய)

7. தூயோன் அவன்தனை வாயுற வாழ்த்தித்
தோகையர்! பாடிய டியுங்கடி (கும்மிய)

திரு. தி. க. இராசேஸ்வரன், B. A.
சிதம்பரம்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஸ்ரீ ஐப்பசி மீ
உச உ வெள்ளிக்கிழமை

## போருக்கெழுந்தது யார்?

ஐக்கிய நாடுகள் அமைப்பின் (U. N. O) அடிப்படைக் கொள்கைகளின்படியும் அவற்ருல் எழுந்த விதிகளைக்கொண்டும்தேசங்களுக்கிடையில் நெருக்கடி உண்டாகும் பொழுதெல்லாம் யார் மீது குற்றம் இருக்கின்றதென்பதை நன்கு ஆராய்ந்தறியக் கூடிய முறையுண்டு. செஞ்சீன ஆசியாக்கண்டத்திலே தென்கிழக்குத் திசையிலும் வட கிழக்கிலே கொரியா நாட்டிலும் தெற்கே திபெத்திலும் காலத்துக்குக்காலம் நெருக்கடியை ஆக்கிய தென்பதை உலகமறியும். தோளிலிருந்து செவியைத் தாவுதலும் வாய்ப்பு வந்தவுடன் ஆயுத தாரிகளாக அடாத்துச் செய்வதிலும் செஞ்சீன கைதேர்ந்துவிட்டதென்பதை ஐக்கிய நாடுகள் முக்கியமாயறிந்திருக்கின்றன. இவ்வாறே இந்திய சீன எல்லையில் எப்பொழுதும் கண்ணுயிருந்த செஞ்சீனப் படைகள் சர்மானிய தேசமும் உருசிய நாடும் சமாதான ஒப்பந்தஞ்செய்தபின் ஒருவரை ஒருவர் தாக்கியதுபோல இப்பொழுது பாரதநாட்டுக் குட்படையெடுத்திருப்பது ஐக்கியநாடுகளின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாருன பழிச்செயல் என்பது தெளிவான உண்மை. எனவேபோருக்கெழுந்தது யார், பாரதமா, செஞ்சீனவா என்பது தெற்றெனப் புலப்படுகின்றது.

இந்த நிலைமையிலே ஈழம் பாரதப் பண்பாடுடைய பாரம்பரியத்திற் பெருமை கொண்டும் எப்பொழுதும் இந்தியாவின் நல்லெண்ணமும் உறவும் வேண்டுமென்று எண்ணுவது மாத்திரமன்று இயம்பிக்கொண்டும் அயல்நாடு என்றமரபுரிமைக் கட்டுப்பாட்டிலிருந்து கொண்டும் பிரித்தானிய நாட்டுப் பொதுநல நாடுகளின் அமைப்பில் இலங்கையும் இந்தியாவும் இருக்கின்றன என்ற வகையிலும் செஞ்சீனவின் வஞ்சகப்போரை நெஞ்சை ஒளியாது கண்டிக்கவேண்டியது கடமை. கண்டிப்பது மட்டுமல்ல மனிதப் பண்புக்கமைந்த முறையிற் பாரதத்துக்குத் தைரியத்தை அளிக்கக்கூடிய ஆதரவு கொடுத்தல் இன்றியமையாத கடமை.

இயற்கையின் சீற்றத்தால 1958-ம் ஆண்டில்

# தமிழின்பம்

[இந்துசாதனம் நடாத்திய சேதுப்பிள்ளை கட்டுரைப் போட்டியில் மாணவர் பகுதியில் முதல் பரிசைப்பெற்ற கட்டுரை முன்னர் வெளிவந்தது. மறுபிரிவில் முதற்பரிசும்பெறும் கட்டுரையும் முன்னர் வெளிவந்தது. இரண்டாம் பரிசுபெறும் கட்டுரை]

முற்றுெடர்—2

கருத்துக்களை விளக்க நினையுங்கால் பழமொழிகளைக்கூறுவது வழக்கம். புலவரல்லாரும் நாட்டு வழக்கில் இவற்றைக் கேள்வியுற்றிருப்பராதலின் விளக்கம் தோன்றும். உழவனைப்பற்றியுரைக்கும் ஆசிரியர் ஊருடன் ஒத்து வாழும் சிறந்த பண்பைக் கூற "உழுகின்ற காலத்தில் ஊர் வழிப் போனால் அறுவடைக் காலத்தில் ஆள்தேட வேண்டா" என்ற பழமொழியைத் தருகிருர். கண்ணை இமை காப்பதுபோல் பயிரைக் காக்க வேண்டுமென, வயலில் மோட்டை போனுல் கோட்டை போச்சு, என்று உழவருக்கிடையில் வழங்கும் மொழியும் காட்டல் காணற்குரியதாம். பையச்சென்ருல் வையந்தாங்கும், வெண்ணெயிருக்க நெய்க்கு அலைந்த வெறியர், போன்றபழமொழிகளும் காட்டப்பெறுகின்றன. அவரை போட்டால் துவரை முளைக்குமா என்ற பழமொழிக்கேற்ற புதுமொழியாகத் "துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்திருக்கிறது" என்ற தொடரும் கற்பனையின்பம் என்ற பகுதியில் காட்டப்பெறுகின்றது.

எளிய இனிய, சேதுப்பிள்ளையாரின் நடையில் காணும் சில கடினச் சொற்களைக் கண்டு சிலர் மனம் வேறு நிலையில் செல்லலாம். ஆனல் சூழ்நிலையால் விளக்கிச்செல்லும் நிலையைக் காணின் மகிழ்

நம. சிவ. சண்முகம், M. A.
தென்னிந்தியா.

வர். ஒல்லும், மாந்தும், உலையவில்லை, கட்டுரைப்பார் ஆயினர் — போன்ற சொற்களை அவர் கையாளும் வகையினைக் காண்போம். 'ஒல்லும் வகையால் நாம் பணி செய்வோம்", "வளமான கனிகளை மாந்தும் காட்சி'' "மனஉறுதி உலையவில்லை'' ஆன்றோர் கட்டுரைப்பார் ஆயினர்'' என்பனவே அத்தொடர்களாம்.

அவருடைய சொற்றொடர்களில் எதுகை மோனை போன்ற பிறநயங்கள் அமைந்திருக்கக்காணலாம். எடுத்துக் காட்டாகப் "பிள்ளைப்பெருமாஞகிய திருஞானசம்பந்தர் உள்ளம் துள்ளி மகிழும்'' "கையில் திருவோடு மெய்யில் திருநீறு" "சமரபுரி முதலியார் வீட்டில் ஓர் அமரகிரியை நடந்தது'' "செழுந்தமிழ்க்கவி பொழியும் செந்நாப்புலவர்க்கு அமுதம் சுரக்கும் அருங் கனியே அமைந்தனவாகும்'' என்பனபோன்ற தொடர்கள் படிப்பவர் உள்ளத்தில் இன்பத்தை யூட்டுவன வாகும்'' என்பனபோன்ற தொடர்கள் படிப்பவர் உள்ளத்தில் இன்பத்தை யூட்டுவன வாகும். சொல் பொருள் தெளிவுறுத்தும் வகையில் தெள்ளத் தெளிந்த தமிழில் கருத்துக்களையெல்லாம் கற்பவர் உள்ளங்கொள்ள விளக்கும் நிலையினைக்கூறுவோம். "செப்பறை'' என்ற பெயரைக் கூறிய ஆசிரியர் பொருளையும் கூறி அதனருகில் மணற்படைவீடு என்ற ஊர் இருப்பதனல் படைவீட்டிற்கருகில் கோட்டையே இருக்க வேண்டும் என்று காரணங்காட்டிச் செல்கிருர். இதுபோன்று திண்டிவனம் என்ற ஊர்ப் பெயரில் புளியங்காடு என்ற பொருள் அமைந்திருப்பதைக் கூறிப் பண்டைக்காலத்தில் அதன் நிலை அதுவென்றும் அது ஒய்மான்நாடு என்று வழங்கியதும் கூறுகிருர். காதல் என்ற சொல் கடி சொல்லாகுமா என்ற ஆய்வில் இறங்கிய ஆசிரியர் நமச்சிவாயவென்னும் நாமத்தில் ஆளுடைப்பிள்ளையார் "காதலாகி''க் கசிந்ததும் தம்பியின் திருமுகம் நோக்கிக் கார்நிற வண்ணன் தீராக் 'காதலனுகும்' என்று குகனைக் குறித்தமையும் குறிப்பிட்டுத் தமிழ் மணத்தையும் உரைக்கிருர்.

ஊசலாடும் சீதையின் உள்ளத்தை உரைக்கும் பேராசிரியர் கம்பன் கவிதையைக் கூறுகிருர். இராமன் அவனு என்ற ஐயம் நீங்க உதவிய சொற்களைக் கூறுகிருர். "கோமுனியுடன் வரும் கொண்டல்" 'தாமரைக்கண்ணினுன்'' என்ற தொடர்கள் ஐயத்தைப் போக்கினவாம். சிந்தாமணியாசிரியர் திருத்தக்கதேவர் நிகழ்ச்சிகளைக் கற்பவர்கண் முன்னர் தோன்றும் நிலையில் கூறும் அடிகளை எடுத்துக்காட்டுகிருர். தீம்பாற் பசியினிருந்த பைங்கிளி.

"பாம்பாலென வெருவிப்
பைம்போன் தோடுகழலக்
காம்பேர் தோளி நடுங்கிக்
கரைசேர்பவளைக்காண்மின்''

என்ற அடிகளைக்காட்டி "மங்கைக்குப் பாம்பினத்துள்ள பயம் மிகப் பெரிதெனக் கருதிய கிளியின் மதிநலம் அறிந்து மகிழத்தக்கதாகும் என்றும் கூறுகிருர், தென் பாண்டிநாடு தந்த பேராசிரியர்க்கு நாட்டுப்பற்று எந்த அளவிற்கு அமைந்தது என்பதனை, 'திக்கெலாம் புகழும் திருநெல்வேலிச்சீமை' என்று கூறும்போதே அவர் உளம் பொங்கும்.

"கவனசித்தர் ஆதிபரும்
மவுனயோகியரும்
கத்திருக்கும் கயிலாயம்
ஒத்திருக்கும்''

'வளம் பெருகும் திரிகூடமலை' யென்னும் குறவஞ்சியடிகளையும்,

"திங்கள்முடி சூடும்மலை
தென்றல் விளையாடும்மலை
தங்கும் முகில் சூழுமலை
தமிழ் முனிவன் வாழுமலை''

என்ற மீனுட்சியம்மைக் குறத்தி அடிகளையும் எடுத்துக்காட்டி, இரு மலையும் தமிழ் மலையே என்றுரைக்கின்ருர்.

செந்தமிழன்னையை நாம் போற்றுவது மெய்யாயின் அத்தாயின் அருந்தவப் புதல்வரை ஆர்வத்தோடு பேணுதல் வேண்டும். காவிய நயங்களெல்லாம் கனிந்தொழுகும் நூல் செய்த கம்பர், ... ... "தன்னேரிலாத தெள்ளுத் தமிழ்ப் புலவராய வள்ளுவரை இன்னும் தமிழ்நாடு தக்க முறையில் தெரிந்து கொள்ளவில்லை. அருந்தமிழ்ச் செல்வமே பெரும் பொருட் செல்வத்திலும் சிறந்ததென்று தெளிந்து இளமையிலே துறவறம் பூண்டு சிலம்பு பாடிய இளங்கோவடிகளது பெருமையை இன்னும் உணர்ந்தோமில்லை'' என்றவாறு பொய்யடிமையில்லாப் புலவரைப்போற்றுத நிலையையும் வருந்திக் கூறுகிருர்.

"கண்ணப்ப னெப்பதோர் அன்பின்மை கண்டும் தன்னையும் ஆட்கொண்டருளி வா வென்ற வா கருணையைப் பாடும் மணிவாசகர் பெருநிலையும், 'பார்குலம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன்'' என்ற கம்பன் பொருளையும் "அல்லேன் நான் இனிச் சென்று ஆளாவதெப்படியோ திருக்காளத்தியப்பருக்கே'' என்ற பட்டினத்தாரடிகளையும் உணர்ந்து உணர்ந்து அன்னோர் கொண்ட இறையன்பின பெருமையினைக் கூறுங்கால் நாம் மெய்ம்மறந்தவராகின்ரேம். உரைநடையில் செல்லாத திறனும் சொல்லாத சொல்லும் இனி இல்லையென்ற நிலையில் நிரந்தினிது சொல்லுதல் வல்லவராகிய செல்வர் செந்தமிழ்த் தென்றல் சேதுப்பிள்ளையவர்கள் கையாண்ட நிலைகளை அடியேன்தன் அறிவிற்கெட்டிய வுரை கூறியமைகின்றேன்.

இன்பத்துள் இன்பம் தமிழின்பம்!
வாழ்க சேதுப்பிள்ளையின் புகழ்!!

---

ஈழத்துப்பெருமக்கள் பெருவெள்ளத்தில் அருந்துயர் அடைந்தபொழுது இந்திய மக்கள் செய்த பேருதவியை நாம் மறந்துவிடலாகாது. உண்மைக்கும் வாய்மை மரபுக்கும் உட்பட்ட கடமை பாரதத்துக்கு ஆதரவு கொடுப்பதே.

—0—

## எழுதுங்கள்

தமிழில் மாதசஞ்சிகை எவ்விதம் அமையவேண்டும்.
உங்கள் தபால் முகவரியுடன்எழுதுங்கள்.

அச்சிடுவோர்,
வெளியிடுவோர்
புத்தக விற்பனையாளர்களின்
தபால் முகவரி வேண்டும்.

எஸ். என். சொக்கநாதன்
புலோலி வெஸ்ற்,
பொயின்ற் பீட்று,
(சிலோன்.)

S. N. Soccanathan,
PULOLY WEST,
POINT PEDRO.
(Ceylon)

M. 176, 9. 16-11-62.

## கந்தசட்டி

**குமாரபுரத்தில்**

முள்ளியவளையைச் சேர்ந்த குமாரபுரம் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் நிகழும் சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 18-ந் திகதி திங்கட்கிழமை கந்த சட்டி விரதம் தொடங்கி, ஏழு நாட்களாக நடைபெற்று வந்தது. ஏழாம் நாள் "வள்ளி திருமணம்" திருக்கல்யாணப் படிப்பு நடைபெற்றது.

X X X

**வற்ருப்பளை
முருகன் மடாலயத்தில்**

வற்ருப்பளை மடாலயத்தில் ஐப்பசி மாதம் 18-ந் திகதி திங்கட்கிழமை கந்த சட்டி விரதம் பல மெய்யன்பர்களால்துவங்கி நடைபெற்று வந்தது. மடாலய பூசகர் பிரம்மஸ்ரீ ச. சங்கரசுப்பிரமணிய சர்மா அவர்கள் ஷை விழாவை ஆரம்பித்து வைத்தார். பொ. மயில்வாகனம் அவர்கள் "சூரபன்மன் வதைப் படலம்" என்னும் பாடல்களை கந்தபுராணத்தினின்றும் எடுத்துரைக்க, திரு. வே. விநாயகமூர்த்தி பயன்கூறி ஈற்றில் அலங்கார தீப தூப நைவேத்திய கருமப்படி பூசை இனிது நடைபெற்றது. கந்த சட்டியும் பூர்த்தியானது.

---

நல்லைக்கீர்த்தனம் — 21.

## வேலவன் வீற்றிருக்கக் கண்டேன்

*

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : பெஹாரி : தாளம் : ஆதி

பல்லவி

நீலச்சிறகு விரித் தாடும் மயிலின்மீது
வேலவன் வீற்றிருக்கக் கண்டேனையா — கோல

அனுபல்லவி

வாலைக்குமரி வள்ளி தேவக்குஞ் சரியோடு
வேலைப் பிடித்துக்கொண்டு சேவல் கொடிதுலங்க

சரணங்கள்

பன்னிரு கண்மலரில் பரிவின் மணம் கமழும்
பால்முகம் ஆறிரண்டும் பக்தர்க்கருள் ஒழுகும்
என்னிரு கண் நிறைந்த எழில்மிகும் உருதிகழும்
எங்கும் ஒளிருமநல்லை ஏத்திக் கவிபுகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் (11-11-62 — 17-11-62)

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உடல்நிலை மேலும் சில காலத்திற்குப் பாதிக்கப்பட்டிருக்கும் வீட்டிலும் அலுவலகத்திலும் சச்சரவுகள் உண்டாம். பணமளவில் ஓரளவு நல்ல வாரம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். வெளிவரும் முயற்சிகளில் ஆரம்பத்தில் பிற்போக்கு ஏற்படும். ஆனால் இறுதியில் நீர் வெற்றி அடைவது நிச்சயம். எதிரிகளுக்கு இன்னலும் ஏற்படும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம் 3ம் பாதம்.

இனத்தவருடன் சச்சரவுகளுக்கும் தவருன விளககங்களுக்கும் இடமுண்டு. ஆனல் பணமளவில் நல்ல வாரம். குடும்ப நிலைமைகள் சீர்திருந்த வேண்டும். கல்வி ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

உமது, குடும்ப தொழில் விவகாரங்கள் குழப்பலாக இருக்கும், இனத்தவருடனும் நண்பர்களுடனும் மோதல்களுக்கு இடமுண்டு. அன்னியர்கள் உதவியாயிருப்பர். உடல் நிலையைக் கவனிக்குக.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

திரும்பவும் ஒரு நல்ல வாரம் உமது எண்ணப்படி நடந்து கொள்ளுதல் முடியும். பண இலாபங்கள் நிச்சயம், ஆனல் கண்ணேய் ஏற்படும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஞாயிறும் திங்கள் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்- வார மிகுதிப்பகுதி ஓரளவு சாதகமானது. புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனல் வெற்றிபெறும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இவ்வார இறுதிவரை உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கும், திங்கள் மாலையும் செவ்வாய் புதனும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும், வார மிகுதிப்பகுதி புதிய முயற்சிகளுக்கு ஏற்றதாயிருக்கும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வார முதற்பகுதி புதிய முயற்சிகளுக்கு ஏற்றதாக இருக்கும், விவசாய ஈடுபாடுகளில் வெற்றியும் உண்டாம். ஆனல் புதன் மாலையையும், வியாழன் வெள்ளியையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

மன நிம்மதி இருக்காது. உடல் நிலையும் பாதிக்கப்பட்டிருக்கும், புதிய முயற்சிகள் தடங்கல்படும். அலுவலகத்தில் சச்சரவும் ஏற்படும், வார இறுதி நாளை எச்சரிக்கையோடு கழிக்கவும்,

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

உடல், குடும்ப நிலைமைகளைப் பொறுத்தவரை சென்ற வார பலனே தொடர்ந்துவரும், ஆனல் பண நிலை பெருமளவில் சீர் திருந்த வேண்டும். நண்பர்கள் உதவியாக இருப்பர்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

எதிர்ப்புகள் கரைந்துவிடும் புதிய முயற்சிகள் நல்ல பலனைத் தரும். நிலபுலங்களால் இலாபங்களும் உண்டாம்:

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல்நிலை மேலும் திருப்தியற்ற நிலையிலேயே இருக்கும். ஆனலும் வியாழனுக்குப்பின் இலேசான முன்னேற்றம் நிச்சயம். எதிர்ப்பாலைச் சேர்ந்த நண்பர்கள் மிக உதவியாக இருப்பார்.

---

## அணிந்துரை அரங்கம்

### மாணவர்கட்டுரைகள்

எழுதியவர் :
நு சி. கந்தையாபிள்ளை
விலை : 2-20

பொருள் செறிவும் விளக்கமும் உள்ள 126 சிறு சிறு கட்டுரைகள் அடங்கியது இந்த நூல்.

விஞ்ஞானம், ஒழுக்கநெறி, சமூகவியல், அரசியல், பண்பாடு, கலைகள், புவியியற்துணிபுகள், வரலாறு, தொழில்முன்னேற்றங்கள், உலகசமாதானம் இலக்கியம், சமயம், அறிவுச் சாதனங்கள், விலங்கியல், விளையாட்டுகள், பொருளாதாரம், வாணிகம், நாகரிகம், இயற்கைச் சக்திகள் போன்ற பல துறைகளிலும் எழுதப்பட்டு அழகான முறையில் மலிவாக வெளியிடப்பெற்ற இந்த நூல், பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஈடு இணையற்றகட்டுரை நூல். அவர்கள் சமயம், வரலாறு, விஞ்ஞானம், இலக்கியம், புவியியல். குடியியல் மொழியியல் ஆகிய எல்லாப் பாடங்களிலும் திறமையாகச் சித்தியெய்துவதற்கும் இந்த நூல் பெருமளவில் துணைபுரியும்.

அதோடு பள்ளி மாணவர்களன்றி, கல்லூரி மாணவர்களன்றி, படிக்கத் தெரிந்த வளர்ந்தவர்களும் மாணவர்களாகி, படித்து உலகறிவை எளிதாக ஈட்டிக் கொள்ளக் கூடிய அருமையான நூல்இது.

X X X

### சங்கப் பலகை

ஆசிரியர் : நக்கீரன்
விலை: 10 சதம்.

பதினேராவது இதழாக வெளிவந்துள்ள சங்கப் பலகையில் 'மேலேறி நான் செல்வேன்' என்னும் கவிதை, எமகாதகன் தொடர் நாடகம், என்னைக் கேளுங்கள் பகுதி, நீதி அமைச்சருக்கு ஜீ ஜீ யின் சவால் ஆகிய விஷயங்கள் வெளிவந்துள்ளன. அமைப்பு அழகாக இருக்கிறது.

---

## சமய தீட்சை

4-11-62 ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கைப் பொதுசன சேவைச் சங்க சமயப்பிரசார சபையினரால் நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழக ஆதரவில் நாயன்மார்கட்டு ஸ்ரீ பேச்சியம்மன் என வழங்கும் ஸ்ரீ இராச இராசேஸ்வரி ஆலயத்தில் பிரம்மஸ்ரீ இ ஞானசேகரக் குருக்கள் அவர்கள்மூலமாக 56 பெயர்களுக்கு இலவச சமய தீட்சை கொடுக்கப்பட்டது. காரியதரிசி திரு. த. இராசரத்தினம் தீட்சையின் மகத்துவத்தைக் கூறி நித்திய கருமவிதிப் புத்தகங்களையும் இலவசமாக வழங்கினர். தீட்சை வைபவத்தில் கலந்துகொண்டவர்களுக்கும், தேவஸ்தான பரிபாலனசபைக்கும் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நன்றி பாராட்டியது.

---

## அனுதாபச் செய்தி

'இந்துசாதனம்' சந்தாப் பணம் சேகரிப்பவரும், சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அநேக காலமாக வேலை செய்பவருமாகிய திரு. கந்தையா நடராசாவின் மகளாகிய நாகதேவி சென்ற திங்கள் அதிகாலை ஆஸ்பத்திரியில் மரணமாகியதையிட்டுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கிறேம். இறந்தவரின் ஆன்மா சாந்தி அடைவதாக.

---

உ
சிவமயம்

## திருமூலதேவநாயனர் குருபூசை

நாள்: சுபகிருது ஸ்ரீ ஐப்பசி உ௪ (10-11-62) சனிக்கிழமை.

இடம் : யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபம்

நிகழ்ச்சிகள்:

ஆரம்பம்: இரவு 7-00 மணி

1. கடவுளாராதனை
2. திருமந்திரத்திருமுறைப் பாராயணம்,

திரு. சி. தருமலிங்கம்அவர்கள்.

விரிவுரை;

திருமூலதேவநாயனர்

சித்தாந்தபண்டிதர்
திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 7-11-62.

---

## நாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டி

எதிர்வரும் (19—11—62) கார்த்திகைத் திங்கள் 4-ம் நாள் நாவலர் பெருமான் நினைவுத்தினம்.

தமிழ் கூறும் நல்லுலகம் புகழ்கூறிப் போற்றும் நமநாட்டு நாவலருக்கு இந்துசாதனம் ஈழத் தமிழர்கள் சார்பில் இவ்வாண்டு உவந்து புரியும் நன்றிப் பணியாக, நினைவுக் கட்டுரைப் போட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதை மகிழ்ச்சியோடு அறியத் தருகின்றேம். போட்டி இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

1. மாணவர் பிரிவு.
2. மற்றையோர் பிரிவு

ஒவ்வொரு பிரிவிலும் முதன்மைபெறும் மூவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். அவர்களின் அந்தக் கட்டுரைகள் இந்துசாதனம் வைரவிழா மலர் சஞ்சிகையில் அவர்கள் புகைப்படங்களுடன் வெளியிடப்படும்.

தலைப்புகள்

1. தேவையும் நாவலர் சேவையும்.
2. நாவலர் செயல்வன்மை.
3. நாவலரும் பழந்தமிழ்நூல்களும்.

ஏதாவதொன்றைப்பற்றி (Foolscap) தாளில் 4 பக்கத்திற்குட்படாமலும் 8 பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதி 20-11-62 க்கு இடையில் இந்துசாதனம் வண்ணர்பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

---

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டில்
வழக்கு இல. 6712.
அல்வாய் மேற்கு
சிதம்பரப்பிள்ளை முருகுப்பிள்ளை
—வழக்காளி,
எதிராக
அல்வாய் மேற்கு
நாகப்பர் கந்தவனம் —எதிரி

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் 1962-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 24-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களிடமாக விருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று

1. அல்வாய் மழவராய குறிச்சியிறை "அருந்தியாவளவு" நிலப்பரப்பு 5 குளி 6- கிணறும். எல்லை கிழக்கு வல்லிபுரம் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடையவாதனம் வடக்கு சுப்பையா பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு சின்னத்தம்பி கைம்பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடையவாதனம், தெற்கு வேலுப்பிள்ளை மகள் பெரியநாச்சிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டயாவிலுஞ் சொரியலாய் மூன்றிலொருபங்கும்,

2, அல்வாய் மணிவிரவாகுதேவன் குறிச்சியிறை "தம்பையப்புலம்" நிலப்பரப்பு 6 குளி 4½; ஷெ தம்பையப்புலம் நிலப்பரப்பு 13 குளி 4½ இதில் 1915-ம்ஆண்டு மார்கழிமாதம் 22-ந் திகதி பருத்தித்துறை றெக்குவெஸ்துக்கோட்டின் 6268-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்ட படத்தின்படி 1-ம் நம்பர்த் துண்டுக்கு நிலப்பரப்பு 7 குளி 5¼ பனைகள் வடலிகளும். எல்லை கிழக்கு சுப்பையா பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு வல்லிபுரம் கதிர்காமருக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு வாரித்தம்பி வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு கந்தன் நாகனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகளடங்கலும்.

தீரட்சித்தொகை ரூபா 872-50. இதில் ரூபா 500-க்கு 13-6-60 தொடக்கம் 6-10-60 வரையும் 9 வீத வட்டி ரூபா 14-00 அதன் பின் முழுத்தொகைக்கும் 7-10-60 தொடக்கம் 4-10-62 வரைக்கும் 5 வீத வட்டி ரூபா 84-96, அங்கீகரிக்கப்பட்ட கோட்டுச் செலவு ரூபா 169-88. கூடிய தொகை ரூபா 1141-34,

V M. KANDASAMY
Commissioner of sales
& Valuer.
வல்வெட்டித்துறை
21-10-62.
M 174, 9-11-62.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில்
மானிப்பாய் சிவக்கொழுந்து
முத்துக்குமாரசாமி
—வழக்காளி.
வழ இல. M.B. 4038.
எதிராக
64, ராப்ஸ்ரேட் வண்ணர்பண்ணை,
1, மீராமொகிதீன் சாகிப் மொகமெட் கனியும் மனைவி
2, ஜமீலாவும்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4038 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1962 ஸ்ரீ டிசெம்பர் மீ 1-ந் உ (1-12-62) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 2663-75 சதம். மேலும் ரூபா 1500 க்கு 29-5-61 திகதி தொடக்கம் 27-9-61 திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 256-85 சதமும், கோட்டுச் செலவில் ரூபா 125 கொடுபட்டிருக்கிறது.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணர்பண்ணை மேற்கிறை "விளாத்திப்புலம்" 12. 2 குளிகள். வீடும் செய்பயிர் வான்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு உசன் சாகிவோவினுதனம். வடக்கு மொகிதீன் சாகிப் மொகமெட் அப்துல்காதரினுதனம். மேற்கு ரேட்டு. தெற்கு ஒழுங்கை. இதிலடங்கியவைகளுடன் முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
கொம்மிஷனரும்,
விலைமதிப்பாளரும்.
643 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம் 28-10-62.
M. 173 9-11-62.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்முகத் தெய்வத்தின் கையிலிருந்த நூல்

—:0:—

சைவபரிபாலன சபை ஆதரவில் நடைபெற்ற மெய்கண்டதேவ நாயனுர் குருபூசைக்குத் தலைமைவகித்த பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் கூறிய முன்னுரையின் சாரம்.

உலகில் சைவசமயமே பழமை வாய்ந்தது. சைவ சமயக் கடவுள் சிவபெருமானே. சிவம் - மங்கலகரமுடையது. சி - சிவம். வ - சத்தி. வட அமெரிக்கா முதலிய மேனுடுகளிலும் சிவலிங்க வழிபாடு இருந்ததாகத் தெரிகிறது. பரத கண்டத்தில் - தமிழகத்தில் சைவ சமயிகள் பண்டு தொட்டு வாழ்ந்து வருகின்றுர்கள். வேதாகமாதி சாஸ்திரங்களில் சைவசமயிகள் நம்பிக்கை யுடையவர்கள். மெய்கண்டதேவர் சிவஞானபோதம் அருளியவர். இச்சிவ ஞானபோதம் தென்முகத் தெய்வமாகிய தக்ஷிணுமூர்த்தி திருக்கரத்திருந்தது. அதுவே மணிவாசகப் பெருமானை ஆட்கொண்டருளிய பரமாசாரியர் திருக்கரத்திற் பொலிந்திருந்தது. சிவஞானபோதமே சைவசமயிகள் எல்லாருக்கும் சொந்தமானது. ஒருபகுப்பாருக்குரியதன்று. சிவஞானபோதம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் அநாதித்தன்மையைப் பிரமாண வாயிலானே நிலைநாட்டுகின்றது- இறை - உயிர் கட்டு என்று எளிதாகப் பொருள்கூறலாம்.

மெய்கண்டதேவர், பொய்கண்டார் காணுத புனித என்ற விசேடத்தானே, உயிர் பிறந்திறக்கும் பான்மை இன்றி என்றும் இறைவருடன் கூடி இன்புறும் என்பது பெற்றும். சிவசப்தம் கேட்டாலே பிணி நீங்கும். "சிவ சிவ என்றிடத் தீவினை மாளும், சிவ சிவ என்றிடத் தேவருமாவர்" திருமூல நாயனுர் கருத்து இது.

அருணந்திசிவாசாரியார் ஆக்ஞையால் தாய்தந்தையர் விரதமிருந்து பெற்றுரும், மெய்கண்டதேவரின் ஞானவுணர்ச்சி கண்டு அவரிடமே அவர் உபதேசம் பெற்றுர், மெய்கண்டதேவரின் பேரின்பதினம் இன்று கொண்டாடக் கிடைத்தது நமது நற்பயனே!

—0—

# பாவக் கணக்கில் பாரபட்சமில்லை

சிவவழிபாடு இயற்றச் சிறந்தகாலம் சிவ இராத்திரி. இது அபரபட்சத்து சதுர்த்தசி கூடிய இராத்திரி, ஒவ்வொரு மாசமும் வரும். ஆனுலும் இவைகளில் மிக முக்கியமானது மாசிமாதத்தில் வரும் அபரபட்ச சதுர்த்தசியில் வரும் மகா சிவராத்திரி. இந்த இரவு அம்பிகை தவம் இருந்து சிவனை அடைந்த நாள். இதுபோல் ஆனி மாசத்தில் வரும் சிவராத்திரி தக்கன் வேள்வியை அழித்த நாளாகும், ஐப்பசி மாசத்தில் வரும் சிவ இராத்திரி மார்க்கண்டருக்காக இயமனை உதைத்த நாளாகும். இயமன் நரகத்துக்கு அதிபதி. ஆனபடியாற்றுன் அன்று இரவை நரக சதுர்த்தசி என்று கூறுவது. மரணத்தில் நின்று காக்கும் சோமத்திற்கு அதிபதியாகிய சந்திரன் உதயமாகும்போது நரக சதுர்தசி ஸ்நானம் கங்கா ஸ்நானம் ஜெப தப தனம் செய்து சிவவழிபாடாற்றுவது. இதை யாரும் செய்யலாம். சாதி, சமயம், இனம் நிறமாகிய பேதங்களுக்கு அப்பாற்பட்ட சிவனை யாரும் வழிபடலாம். இதுவே பழைய சைவ முறை. இதுவே தீபாவலியின் தனிச் சிறப்பு. ஐப்பசி மாசத்தில் சூரியன் துலா இராசியில் நிற்க சித்திரை நட்சேத்திரத்தில் சந்திரன் வர நரக சதுர்த்தசி நிகழும். துலா இராசியில் பங்கமுகிய சனி உச்சமடையும். சனிக்கு அதிதேவதையாகிய நரகாதிபதியாகும். இயமனிடமிருந்து தப்புவதற்கு சிவ வழிபாடு ஒன்றேதான் வழி. கள்ளுச் சாராயம் குடித்து ஆடு கோழி வெட்டி மதியை மயக்கி சிவவழிபாடுசெய்யமுடியாது. மனம், வாக்கு, காயத்தைச் சுத்தமாக வைத்து மிகு தாழ்மையுடன் பயபக்தியாகச் சிவனை வழிபட்டாற்றுன் நமக்குச் சித்தி உண்டாகும். அன்பும் அறமும் அருளும் பொங்கும். ஆன்மா சிவமயமாகும். நித்திய வாழ்வு எய்தும். அப்போது இயமன் கிட்ட வரமாட்டான், சித்திரை நட்க்ஷேத்திரத்திற்கு அதிபதியாகிய சித்திரகுப்தர் தம் கணக்கைக் கைவிடுவார். ஆனுல், பாவச்செயல் புரிந்தால் கணக்குச் சரவரப் பதிந்து இயம தரும இராசனுக்கு ஒப்படைத்து பட்சபாதகமின்றி தருமபரிபாலனம் நடத்தப்படும். இது ஆரியர் திராவிடர் வெள்ளையர், கறுப்பர், இந்து மிலேச்சர் என்று பார்க்கப்படமாட்டாது. யாருக்கும் உள்ள நியாயம். இதை மிகச் சிலர்தான் அறிந்து தம்மைத்தப்பவைத்து நடப்பார்கள். பூவுலகும் வானுலகும் ஒன்றுக்கொன்று உதவியாய் இருந்து பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான் என்று சிவனை அழைக்கின்றுர்கள். [illegible] தபம் தானம் செய்ய [illegible] வலி நல்லநாள்.

— சௌரிராயன் —

போன...... திரும்பிவந்தார் புதுப்பதவியோடே!



பெரியவர்: என்ன புதினம் விகடரே?

விகடன்: போன பீலிக்சுத் திரும்பி வந்தார் புதுப்பதவியோடே!

பெரி: அப்புறம்

விகடன்: அப்புறம்என்ன? சிப்பி திரும்பிவிட்டார் சிறிச்சினந்து கொண்டு. சிப்பியும் பீலிக்சும் கண்ணும்பூச்சி விளையாட்டு.

பெரி: எல்லாம் இந்த அரிசியாலே தானே?

விகடன்: சுதந்திரக்கட்சியினர் சீனுவின் சிவப்பு அரிசிஉண்டு பதங்கெட்டுப்போனுர் அப்பனே!

# கருத்துக் கலச

தமிழ்மொழியின் வளர்ச்சிக்குபேச்சுக்கலை அபிவிருத்தியடையவேண்டியது அவசியமாகும்.

— ஓர் அறிஞர்

x x x

ஆன்மாவின் சக்தியை உணர வைப்பதுதான் தத்துவ சாஸ்திரம். அது உலகத்தையும் வாழ்வையும் முழுப்படியாக அடக்கும் ஒன்று.

— பேராசிரியர் ஜோசப் பீப்பர்

x x x

நாம், நமது நாட்டின் சூழலுக்கும் வாசனைக்கும் ஏற்ப, பிறநாட்டுக் கதை முறைகளைக் கையாண்டு சிறு கதைகளைப் படைத்தால் ஈழத்திலும் சிறந்த இலக்கியம் தோன்ற வழி பிறக்கும்.

— எஸ். ஸ்ரீநிவாசன் M. A

x x x

இந்தியாவில் எழுத்துத் துறை பன்மடங்கு வளர்ந்துவிட்டது மறுக்க முடியாத உண்மை. அவர்கள் முயற்சிக்குத்தக்கதாக உயர்நதே காணப்படுகிறுர்கள். நம் நாட்டு எழுத்தாளர்களும் முயற்சித்து உன்னத நிலைக்கு வரவேண்டும்.

x x x

இன்று யதார்த்தம் என்று சொல்லிக்கொண்டு அருவருக்கத்தக்கவற்றையெல்லாம் எழுதத் தொடங்கியிருக்கின்றனர். குறுக்கு வழியில் பிரபலமாகக் கையாளப்படும் இந்தப்பாதை நம்மை நரகத்[illegible] [illegible].

—க. தி. சம்பந்தன்

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

## ஐவகை யாகம் — அல்லது ... ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் புறத்தேயும் பரவச் செய்ய வேண்டும். இதனை மந்திரம் கிரியா பாகங்களுடனும் செய்யலாம். இப்படிச் செய்வதனுலே வீடுகளும் சுற்றுடலும் சுத்திகரிக்கப்படுகின்றன. அக்கினியினுல் பரமாணு சூடடைந்ததுடன் மேலேகிளம்பிச் செல்லச் செல்லப் பக்கத்திலுள்ள பரமாணு அப்படிச் சென்றதனுலுண்டான வெளியிடத்தில் பிரவேசிக்கும். ஆகவே அக்கினியினுல் தகிக்கப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்ட பரமாணு மனுஷரைச் சூழ்ந்திருக்கும். மனுஷன் சீவித்தற்குச் சுவாசிக்க வேண்டும். சுவாசிப்பது சுத்தமான பரமாணுவையேயாயிருப்பின் தேகம் நோயற்றுப் பலமுற்றிருக்கும்.

இனிப் பிதுர் யக்ஞம்:— தென்புலத்தாரெனச் சொல்லப்படும் மூதாதையருக்கு ஒருவன் செய்யவேண்டிய கடமைகளைக் குறிக்கும். ஆனுல் மூதாதையர் தென்புலஞ் செல்லுமுன் அவர்களை அலட்சியஞ் செய்து பசி, தாகம், குளிர் முதலியவற்றில் வாட விட்டு, அவர்கள் இறந்தபின் திதி, மாளயம், மாசிகம் முதலியன செய்தலில் பிரயோசனம் என்ன உண்டு? பிரதிதினமும், மாதா, பிதா, குரு, பாட்டன், பாட்டி முதலிய முதியோரை வணங்கி அவர்களுக்கு ஆக வேண்டியன உதவி, அவர்கள திருப்திகரம் பெற வாழ்ந்து ஆசீர்வாதம் செய்யப்பெற்றிருப்பதே ஒவ்வொரு கிருகஸ்தனும் அவசிய நிபந்தனையுடன் செய்ய வேண்டிய பிரதான யக்ஞமாகும்.

மனுஷ யக்ஞம் எத்தனையோ அநாதைப்பிள்ளைகள், தீரா நோயாளர், அவயவக் குறைவுடையோர், பொறிகள் வலிகுன்றப்பெற்றோர், புலனமையப் பெறுதோர், மனுஷவர்க்கத்திடையே இருப்பதைக் காண்கிறோம், இத்தகைய வலியற்றவர்களுக்குப் பசி, தாகம் முதலியன போக்கி, கூடிய அளவு இன்புறச் செய்தலே மனுஷயக்ஞம் எனச் சொல்லப்படும்.

இறுதியில் பூதயக்ஞம் — மானுடர்களிலும் அறிவு குறைந்தனவாகிய, மிருகம், மரம் முதலியவற்றைக் குறைவடைய விடாது, வளர்க்க வேண்டும். நந்தவனம்வைத்தல், பழங்களைக் கொடுக்கும் விருட்சங்களை, நாட்டி வளர்த்தல். பசு முதலிய உபயோகமுள்ள சீவசெந்துக்களைச் சிதைவுறு வண்ணம காத்தற்கு வேண்டிய வசதிகள் அமைத்தல், தாம் உண்ண முன்பு காகத்திற்கு அன்னமிடல் முதலியனவே பூதயக்ஞம் எனப்படும்.

ஆகவே மேற்கூறப்பட்ட ஒவ்வொரு யக்ஞமும் ஒவ்வொருவராலும் நித்தியமாகச் செய்ய வேண்டிய பிரதான மூடையவை யாகும். இவைகளில் ஒன்றைக் கவனியாது, அலட்சியம் பண்ணி, ஒருவன் விடுவானேயாகில் அவன மானுடப் பிறப்பினனுயினும், அவனை அவ்வகுப்பில் வைத்தெண்ணப்படாது. எனவே ஒவ்வொருவரும், மேற்குறித்த யக்ஞங்களை நாடோறும் தவருது செய்வதால், ஆயுள்விருத்தியும், ஆரோக்கியமும், சௌபாக்கியமும் தாமாகவே வந்தடையுமென்று, ஸ்மிருதி முதலிய ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 9-11-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org